# 51. திருத்தணிகைமலை.

124

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*பண் - பஞ்சமம்.*

**பொ**ன்னா ரங்க டாங்கு கொங்கைப் பூவையர் மையலிலே
பன்னா ளும்பட் டுழை கொண்டு படுவனஞ் சேர்முன்னே
தென்னார் வண்டு பாடு தெய்வத் தணிகை நெடுங்கிரிவாழ்
மன்னார் ஞானச் சேய்செம் பாத மலரை வணங்குதுமே. 1

**கூ**னி யாடிக் கோல தூன்றிக் குறுகி நடந்திளைஞர்
பானெ கிழ்ந்த கஞ்சி யுண்டு படுவனஞ் சேர்முன்னே
தானி யார்த்தச் செல்வர் சேருந் தணிகை நெடுங்கிரிவாழ்
ஆனி யற்ற சேய்செம் பத்ம வடியை வணங்குதுமே. 2

**ஈ**ழை கீர்கீ ரென்றி ழுக்க விரும லெழும்புமுனே
தாழை வாழை யீனும் வண்மைத் தணிகை நெடுங்கிரிவாழ்
ஏழை வள்ளி கொண்கன் மாலுக் கிகல்வளை தந்தபிரான்
மாழை ராம நாதன் பாத மலரை வணங்குதுமே. 3

**க**ண்கண் மங்கிக் காத டங்கிக் கருத்து மயங்குமுனே
தண்கொள் பங்க யங்கள் விள்ளுந் தணிகை நெடுங்கிரி வாழ்
பண்கள் பாடு வாயன் சேயன் பனிமலர் மன்பணிகோ
கண்க ளீரா றெந்தை பாத கமலம் வணங்குதுமே. 4

**கே**ச மெல்லாம் வெண்மை பூத்துக் கீழ்நடை காண்முன்னே
தாசர் பல்லோ ரேத்த வுள்ள தணிகை நெடுங்கிரிவாழ்
ஈச னீசர் பால னாத னிமையவர் கோனம்மான்
வாச மொய்ம்ப னெந்தை பாத மலரை வணங்குதுமே. 5

**மூ**ளை குன்றி மாழை கொண்டு முழுது மடங்குமுனே
தாளி தண்டு மல்கு வண்மைத் தணிகை நெடுங்கிரிவாழ்
காளை காளை யான னத்தான் கடவு ணறுந்தகரப்
பாளை யோதி வள்ளி மன்றாட் பதுமம் வணங்குதுமே. 6

**கா**ல்கை யோய்ந்து கீன்மு டங்கிக் கவலை யழுந்துமுனே
சால்பு வீங்கு நேச ரேத்துந் தணிகை நெடுங்கிரிவாழ்
வேல்கொள் கையன் புள்ளி ருப்போன் விடவ ரவந்தொழுத
வால்கொள் பாதன் சுந்த ரன்றாண் மலரை வணங்குதுமே. 7

---

*6. **தாளி** = ஓர் கொடி.*

***தண்டு** = தொளையுடைப் பொருள். இது புறக்காழெனும் புல்லெனவும் புகலப்படும். "புறக்காழெல்லாம் புல்லென மொழிப" என்பது தொல்காப்பியம். பனை மூங்கில் முதலியன புல்லைச் சார்வனவாம்.*

**வெ**ள்ளை யாய பல்வி ழுந்து விரைவு தளர்ந்திடுமுன்
வள்ள னம்பன் பிள்ளை யேயெம் மனதை யுணர்ந்தருளும்
தள்ளை யேயென் றன்பி னேத்தித் தணிகை நெடுங்கிரிவாழ்
மள்ளல் வேலன் மாசில் பாத மலரை வணங்குதுமே. 8

**பா**ய்கி டந்து பவ்வீ பெய்து பையல்கள் சீயெனுமுன்
காய்கி ழங்குண் போர்க ணாத கருணை யிரங்கியருள்
தாய்கி ரந்தி நூறை யென்று தணிகை நெடுங்கிரிவாழ்
சேய்கி ளர்ந்த வேரி யந்தாட் டிருவை வணங்குதுமே. 9

**உ**ண்ணீ ரன்னஞ் செல்ல லின்றி யுயிரு ளடங்குமுனே
தண்ணீ ரென்று முள்ள வண்மைத் தணிகை நெடுங்கிரிவாழ்
தெண்ணீர் மைச்சு ரேசன் சந்தத் தெருள னிறைஞ்சியகோன்
கண்ணீ ராள ரன்பன் பாத கமலம் வணங்குதுமே. 10

சார்வரி வருடம் ஆவணி மாதம் 28ஆம் தேதி புதவாரம்.